
# யாழ் நாதம்

இதழ் 4 1998



யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
கொழும்பு கிளை வெளியீடு

# யாழ் நாதம்

யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கக்
கொழும்புக் கிளையின் வெளியீடு

இதழ் 4 - 1998

*உள் அட்டை........*

கல்லூரி கீதம்

2 சிறு துளி பெரு வெள்ளம்

3 அணையாத தீபம்
ஏமது யாழ் நாதம்

4 தொழில் பார்க்கும பெண்கள்

7 Cataracts

9 The Calibre of our Teachers

11 Use of Pesticides
and Health Hazards

12 மக்கள் படும் பாடு
நாக பூஷணிக்கு சரணம்

13 மகளான வாசுகித் தாய்

14 Memory

15 வாழிய வாழியவே

16 யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்கம்
கொழும்புக்கிளை நான்காம்
ஆண்டு அறிக்கை

21 யாழ் இந்து மகளிர் கல்லூரி
பழைய மாணவிகள் சங்க
கொழும்புக்கிளையின்
செய்திகள்.

22 ஐம்பது வருடகாலம்
தலைசிறந்து விளங்கும்
யாழ். இந்து மகளிர்
கல்லூரி.

24 பொன் விழாக் காணும்
யாழ் இந்து மகளிர்
கல்லூரி

28 1. யாழ்நாதம்

30 யாழ்நாதம்

32 சஞ்சிகை ஒரு விமர்சனம்

# சிறு துளி பெருவெள்ளம்

யாழ் நாதம் இதழ் 4 சிறிய மலராக வெளி வருகின்றது. பல பிரச்சனைகள் காரணமாக சங்க அங்கத்தவர்களின் அர்ப்பணிப்பு குறைந்து கொண்டு வருகின்றது. இப் பிரச்சனைகளில் பொருளாதாராம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

முன் வைத்த காலைப் பின் வைக்காமல் இருப்பதற்காகவும் சங்கத்தின் செயற்பாடுகள் எங்கள் அங்கத்தவர்களுக்கு கிடைப்பதன் பொருட்டும் இதழ் 4லை குறைந்த செலவில் அச்சிட்டு வெளியிடுகின்றோம்.

சிறு துளி பெரு வெள்ளம். சிறு சிறு துளிகளாக வெளிவரும் யாழ்நாதம் இதழ்கள் பெரு வெள்ளமாக எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்பதே என் விருப்பம்.

இம் மலரை பிரசுரிக்க உதவிய யுனி ஆட்ஸ் நிறுவனத்திற்கும் அதன் உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்கட்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

*திருமதி சிவகாமி அம்பலவாணர்*
*ஆசிரியர்*
*61/2 அப்துல் கபூர் மாவத்தை*
*கொழும்பு 3.*

# அணையாத தீபம் எமது யாழ்நாதம்

யாழ் /இந்து மகளிர் கல்லூரிப் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடாகிய "யாழ் நாதம்" நான்காவது இதழ் இவ்வாண்டும் வெற்றிகரமாக மலர்ந்துள்ளது. இம் மலரினை எவ்விதத்திலும் பிரசுரித்தல் வேண்டும் என்று முழுமையான உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் செயல்பட்ட எமது செயலாளரின் திறமையினையும் விடா முயற்சியினையும் நான் மனமாரப் பாராட்டுகின்றேன்.

ஒவ்வொரு இதழுக்கும் பழையமாணவிகளிடமிருந்து ஆக்கபூர்வமான கட்டுரைகளைச் சேகரிப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல என்பதை நாமறிவோம். அப்படியிருந்தும் இத்தகைய சிரமமான பணியினை எமது செயலாளர் தொடர்ந்தும் ஆற்றி வருவதையிட்டுப் பெருமைப்படுகின்றோம். எமது சங்க அங்கத்தவர்கள் பலரிடம் எழுத்தாற்றல் இலைமறை காயாக புதைந்துள்ளது. சிலர் பிரபல எழுத்தாளர்களாகவும் பேச்சாளர்களாகவும் திகழ்கின்றனர். எமது அங்கத்தவர்கள் சிறிது நேரத்தை ஒதுக்கித் தமது வளமான கருத்துக்களையும், அரிய சிந்தனைகளையும், அனுபவங்களையும் எழுத்து வடிவில் மற்றையோருக்கும் புலப்படுத்துவதற்கு எமது சஞ்சிகை நல்லதொரு சந்தர்ப்பத்தை அளிக்கின்றது. யாழ் நாதம் இதழ் மூன்றில் திருமதி திலகவதி வீரசிங்கம் எழுதிய "நாலு கோடிப் பாடல்" என்ற கட்டுரையினை, 'மங்கை' என்ற சஞ்சிகை ஆசிரியர், 1997ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வெளிவந்த தனது 'மங்கை' சஞ்சிகையில் மறு பிரசுரம் செய்துள்ளார். எமது யாழ் நாதத்தின் புகழ் எங்கும் வியாபித்துள்ளது என்பது இதிலிருந்து தெளிவாகின்றது

தற்போதைய அமைதியற்ற, நெருக்கடியான சூழ்நிலையில் வாழும் குடும்பப்பெண்கள், தமது ஐம்புலன்களையும் ஒரு நிலைப்படுத்தி, நிம்மதியாக ஓரிடத்திலிருந்து எழுதுவதென்பது இயலாத காரியமாகும். ஆனாலும் ஆண்டுக்கொருமுறை மலரும் இந்த யாழ்நாத மலரினையும் அழகுறச்செய்வது நம்மவரின் கடமையாகும். ஆகையால் யாழ்நாதம் என்றும் அணையாத தீபமாக நிரந்தரமான ஒளி பெறுவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என எமது பழைய மாணவிகள் அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து மலரட்டும் எமது சங்கத்தின் சஞ்சிகை.

**திருமதி தயாநிதி செல்வநாயகம்**
*தலைவர்.*

ஒரு கண்ணோட்டம் –

# தொழில் பார்க்கும் பெண்கள்

சமுதாயத்தில் ஒரு பெண்ணின் பங்கு என்ன ?

இக் கேள்விக்குப், பூமியிலும் வானிலும் (தெய்வ லோகம்) பெண் இல்லாமல் ஒரு இடமுமில்லையே என்று சுருக்கமாகப் பதில் சொல்லலாம். எதை எடுத்தாலும், எங்கு பார்த்தாலும் பெண் வகிக்கும் பங்கு மகத்தானது என்பதை நேரில் காணலாம்.

அன்றிருந்த பெண் இல்லம் என்ற வட்டத்துள் மாத்திரம் வளைய வந்தாள். இன்று அப்படியல்ல அரசியல் பொருளாதாரக் காரணிகள், ஆண்கள் விரும்பியோ, விரும்பாமலோ அவளை வெளியுலகிற்குக் கொண்டு வந்து விட்டன. எமது நாட்டைப் பொறுத்தவரை பெண் துரிதகதியில் முன்னேறி விட்டாள். அரசியல் சுதந்திரம், பொருளாதார சுதந்திரம், கல்வியிற் சுதந்திரம் இப்படி அவளுக்குப் பலவிதங்களில் சமத்துவம் உண்டு. இன்று தொழிற்றுறைகளில் ஏராளமான பெண்கள் உளர். ஆனால் முன்பெல்லாம் ஊதியமற்ற உழைப்பை நல்கி வந்த பெண் இன்று கை நிறையச் சம்பளம் வாங்குகிறாள். அவளுக்குத் தொழில் பார்ப்பதில் சட்டரீதியான பிரச்சினை இல்லை. சுயதொழில் செய்யவோ ஏராளமான வாய்ப்புகள். இப்படி நாம் பெருமைப்படும் அதே நேரத்தில் குறிப்பிட்ட சில துறைகளில் இன்னமும் அவள் பிரவேசிக்க முடியாத ஒரு நிலையையே காண்கிறோம். இதற்கு அவள் பெறும் கல்வியைத்தான் குறை கூற வேண்டும். பட்டதாரிகளாகப் பல பெண்கள் வெளிவருகிறார்கள். உற்பத்தித்துறை சாராத பயிற்சியுடன் பலரும் ஒரு பட்டத்தைச் சுமக்கிறார்கள் இதனால் அவளால் படிப்புக்கேற்ற வேலையைப் பெற முடிவதில்லை. சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைபார்க்கும் பெண்களில் பல பட்டதாரிகள் உள்ளனர், ஆனால் அங்கு ஆடைத்தொழிற்சாலையில் என்ன வேலை பார்க்கிறார்கள்? வருடக் கணக்காக தையல் மெஷின் முன் அமர்ந்து ஒரு சேட்டுக்கான கொலரைத் தைத்துக் கொண்டிருப்பவர்கள் பலர். அவர்கள் படித்த படிப்பிற்கும் செய்யும் வேலைக்கும் என்ன தொடர்பு? இதே

போன்று படித்துவிட்டு மத்திய கிழக்கல் வீட்டு வேலை செய்யப் போகும் பெண்கள் எத்தனை பேர்? அங்கு மொழியும் தெரியாமல் மாடுபோல், மௌனமாக வேலை பார்த்துச் சம்பாதிக்கிறார்கள். நாட்டில் கல்வி கற்பவர்களில் பெண்களின் தொகை ஆண்களையும் மிஞ்சி விட்டது என்று பெருமைப் பட்டால் மாத்திரம் போதுமானதா? கல்வியறிவைப் பயன்படுத்தி திருப்தியுடன் பெண் தொழில் பார்க்கும் காலம் வரவேண்டும்.

அரச தனியார் துறைகளில் வேலை எப்படியோ கிடைத்துவிடும் ஆனால் பதவி உயர்வு என்று வரும்பொழுது பெண்ணிற்கு இன்னமும் பாகுபாடுதான் காண்பிக்கப்படுகிறது. நிர்வாக சபைகளை எடுத்துக் கொள்ளுங்கள். அங்கு திறமை அடிப்படையில் அங்கத்தவர்கள் நியமிக்கப் படுவதில்லை. பெண்ணுக்கு ஒரு விகிதாசாரமே பேணப்படுகிறது. சபையில் எட்டு அங்கத்தவர்கள் என்றால், அவர்களில் ஒருவர் மாத்திரமே பெண்ணாக இருப்பார். இதனால் அவர் செய்ய விரும்பியதையும் செய்ய இயலாத நிலை.

ஏன் தொண்டு அடிப்படையில் இயங்கும் சங்கங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். ஆண்களும், பெண்களும் சேர்ந்து அங்கம் வகிக்கும் சங்கங்களில் ஒரு பெண் தலைவராகத் தெரிவு செய்யப்படுவதைக் காண்கிறோமா? ஏன் அவளுக்குச் சங்கத்தை நிர்வகிக்கும் திறன் இல்லையா?

அன்று தொடக்கம் இன்றுவரை ஆசிரியத் தொழிலில் கூடுதலானோர் பெண்களே என்று கூறப்படுகிறது. பெண்கள் கல்லூரியானால் ஒரு பெண் ஆதிபராகும் வாய்ப்பு உண்டு. ஆனால் கலவன் பாடசாலைகளில் எத்தனை பெண்கள் அதிபர் பதவி வகிக்கிறார்கள்?

இவற்றையெல்லாம் விட தொழில் பார்க்கும் பெண்களுக்குப் பாலியல் ரீதியாக ஏற்படும் பிரச்சினை பற்றி எழுதுவதானால் பக்கம் பக்கமாக எழுதலாம். வேலை பெறுவதற்கே பெண் தன்னை இழக்க வேண்டிய சந்தர்ப்பங்களுக்கும் குறைவில்லை. பதவி உயர்வு பெறுவதற்கும் தன்னை அவள் பணயமாக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. இந்த நிலை இருப்பதால், திறமையால் பதவிகளில் உயரும் பெண்களும் கிசுகிசுப்பிற்கு ஆளாகும் நிலை.

வேலை பார்க்கும் பெண் இரட்டைப் பழுக்களைச் சுமப்பது பற்றியும் பலர் அங்கலாய்க்கிறார்கள். சுமைதாங்கியாக அவள் இருக்கும் நிலையைப் பொருட்படுத்தாவிடினும் தான் சம்பாதிக்கும் ஊதியத்தை தான் விரும்பியபடி நற்காரியங்களுக்கு அவளால் பயன்படுத்த முடியாத நிலைதான் வருத்தத்திற்குரியது. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்று பணம் சம்பாதிக்கும் பல பெண்களின் சோகக் கதைகளே இதற்கு அத்தாட்சியாகிறது.

பெண்ணிற்கு சுதந்திரம் கிடைத்துவிட்டது, சம்பாதிக்கும் வாய்ப்புக்களும் வந்துவிட்டன ஆனால் இன்னமும் அவள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறாள். குடும்பம் என்ற பாசவலை அவளுக்குச் சில கட்டுப்பாடுகளை விதித்து, சிரமப்பட வைக்கின்றது. அவள் தனக்கே உரித்தான தியாக மனப்பான்மையுடன் சிரித்தபடி காலையில் அலுவலகத்திற்குத் தொழில் பார்க்கச் செல்கிறாள். சிரித்தபடி மாலையில் வீட்டில் மீண்டும் தொழில் பார்க்கத் திரும்புகிறாள்.

*எழுதியவர் – சற்சொருபவதி நாதன்.*

அன்பனே!

நீ உயர்வை யடையவேண்டுமானால் உன்னை மிகவும் தாழ்ந்தவனாகவே எப்போதும் கருது; நான் மேலானவன்' என்று நினைத்துக் தருக்குறாதே; சிறந்தவன் என்று எண்ணுகின்ற எண்ணத்தால் உயர்வையடைய முடியாது. ஆதலினால் உன் மனத்தில் தாழ்மை இருக்கட்டும்.

*தாழ்வெனுந் தன்மையோடும்*
*சைவமாம் சமயம் சாரும்*
*ஊழ்பெறல் அரிது*

–(வாழ்வெனு) சித்தியார்

தொகுப்பு – அன்பன் கிருபானந்தவாரி

# CATARACTS

What is a **CATARACT**?

It is a clouding of the lens inside the eye, which blocks out light and interferes with normal vision.

Without a cataract-light rays pass through the lens - a clear, colourless body that focuses images on the retina and enables us to see.

With a cataract - the lens become clouded, blocking light rays from reaching the retina and preventing clear vision. A **CATARACT IS NOT** a film or growth over the eye, a tumor, infection or contagious disease.

Why is it **IMPORTANT** to know about cataracts?

Because they are the leading cause of vision impairment among adults. They are common in people over 55. About 75% of people over 65 develop some form of cataracts though only 1 in 10 of those affected require treatment. Young people..... even babies can have them.

Cataracts are **FREQUENTLY NEGLECTED** because people fear treatment or refuse to admit that their eyesight is failing.

**YET**.... the large majority of cataract cases can be treated successfully.

Over 95% of **ALL CATARACT OPERATIONS RESTORE SIGHT.**

What **CAUSES** Cataracts?

The exact cause cannot always be determined. Cataracts occur when there is a change in the chemical composition of the lens. Factors that may bring on such a change include.

**AGING (degenerative cataracts)**

Normal aging of the eye may cause the transparent protein fibers that make up the lens to harden and begin to lose transparancy.

Sometimes called "senile cataracts" they can occur at age 50 or earlier. (This may be inherited)

Early detection is possible if you have a thorough eye examination at least every 2 years, especially after age 40.

**HEREDITY OR BIRTH DEFECTS** (Congenital Cataracts)

Fetal and maternal disease (such as German measles) or hereditary factors may cause cataracts to be present at birth.

As a precaution, immunization against measles is recommended for all young people. Pregnant women should avoid exposure to people with infectious diseases.

**EYE INJURY (Traumatic Cataracts)**

A hard blow to the eye, a sharp object piercing the eye, intense heat or contact with toxic agents can cause cataracts. They may appear immediately, or not until months or years later.

To prevent injuries, wear safety glasses when using machinery, chemicals, radioactive materials, chopping wood, etc.

**OTHER DISEASES (Secondary Cataracts)**

Eye disease such a glaucoma, ititis, eye tumours, etc., may lead to cataracts. Diseases or conditions (such as diabetes) that affect the lens can also lead to cataracts.

Some medications may also cause cataracts.

Prevention is sometimes possible with proper medical care for the underlying condition.

**SYMPTOMS** of cataracts may include....

**BLURRING OR DIMMING OF VISION**

Objects must be held very close to the eyes. More light is required than before.

**SENSITIVITY TO LIGHT AND GLARE**

Lights may appear double at night or cause reflections and blurring, making night driving difficult.

**FEELING OF "FILM" OVER EYES**

This may cause frequent blinking or give objects a yellowish tinge.

**FREQUENT CHANGE OF EYEGLASS PRESCRIPTIONS**

However, as condition gets worse, changes are no longer helpful.

**"SECOND SIGHT"**

Vision at close image may improve temporarily, but as the cataract develops, sight worsens.

CHANGE IN COLOUR OF PUPIL(S)

Normal black colour may become milky, grey, yellow or white.

Cataracts do not cause discomfort, redness, tearing or inflammation.

If you even suspect any symptoms of cataracts, have an eye examination promptly.

Diagnosis of cataracts can be made by an ophthalmologist during a thorough, painless eye examination.

*(Courtesy Lanka Business Pages 1993, Part II)*

# THE CALIBRE OF OUR TEACHERS

The car sailed through the school gates and screeched to a halt just at the entrance of our classroom. Thirty nine pairs of eyes stared at our maths teacher as she hobbled out of the car on crutches and somehow, with the help of some prefects managed to take her seat in the classroom. Her plastered left leg was resting on a low stool.

We had heard that she had broken her leg when she fell in the bathroom and we had anticipated we would get a lot of free periods or library periods.

Against the doctor's advice she had come to do her duty by us. She had told the doctor she couldn't rest peacefully with the knowledge that batches of 30, 40 girls would be idling as she rested. She had wrenched from her doctor a half hearted consent to do her duty. She occupied the same seat the whole day, and we swapped classrooms with her students at each bell. Different batches of students came and occupied our classroom and were taught by her.

"Taught by her"- it is a heavenly experience, all her students loved maths and loved her. None of them ever went for tuitions in Maths. Her teaching was divine. If there was a slightest doubt in anyone of us, her all seeing eyes and her prying questions would spy it and she would not proceed until all doubts were cleared.

Children fought to be in her class. Parents saw the principal with repeated requests to put their children in

her class. She not only taught us Maths. She taught us to worship teachers, for we all worshipped her. When her leg was bad, students fought with each other to wash her dishes and plates when she had her lunch.

Once she was taking a class "Parallel lines meet at infinity. Generally they don't meet. Suppose they meet....." she could not proceed. A student had put up her hand. That meant she had a doubt. "Yes, what is your doubt?" Said our teacher. An underaged immature student got up. "I don't understand why we have to suppose impossible things. Parallels don't meet, so why should you suppose it?" whimpered she. Any other teacher would have whithered her doubt with a look. But not our teacher."Well child..." her voice droned on bringing out so many reasons, but none of these were accepted by her student. The bell rang and the class was over. We thought the matter ended there, but it didn't. Our teacher had discussed this student's doubt with her colleagues. They forewent their lunch interval to clear this student's doubt. Such a pains-taking teacher was she. Now she is leading a peaceful retired life. But again she has broken her leg. When I saw her thus, I was reminded of the last time when she broke her leg.

I am sad to think I am no longer a small girl who could be at her service. This dedicated teacher was Mrs. T. Pararajasingam (nee Miss. Thambu) and the immature student was none other than I. If J.H.L.C has a reputation now, it was because of the calibre of such teachers.

**Savithiri Umamakeswaram Pillai**

# USE OF PESTICIDES & HEALTH HAZARDS


## Mixing & Application

Read label carefully before using any pesticide.

Follow strictly recommended dosage.

Avoid contact with pesticide.


Use a stick when mixing pesticides and protect your body with appropriate clothing when spraying or dusting.



Cover nose and mouth with a cloth or mask




Do not apply pesticides against wind direction to avoid inhalation






Do not smoke, eat or chew betel while mixing or spraying pesticides.



Do not spray pesticides continuously for a long period (not more than 4 hours a day)

Avoid spraying when the temperature is high.

Do not use leaking equipment.



Do not clean blocked nozzles by blowing or sucking.



**(Coutesy Lanka Business Pages 1993 Part I)**

## மக்கள் படும்பாடு

ஆயிரந்தான் சொன்னாலும் –
நான்
அகதியாய் வந்தவள் தான்

கொழும்பு க்கு வந்தாலும்
கொட்டியா என கைதாம்

பயந்து வீட்டில் இருந்தால்
பயன் எதுவும் இல்லை

காற்று வாங்க செல்லக்
கூட சுதந்திரமும் இல்லை

சனத் சிச்சர் அடிக்கிறான் – என
சனம் விழுந்து விழுந்து பார்க்குது–
ஆனா
சண்டை என சொல்றாங்க –
அங்கு
சனம் படும் பாடென்ன?

*தீபா*

## நாகபூஷணிக்கு சரணம்

நாகரூபி சரணம் சரணம் தாயே
நாகரூபி சரணம் சரணம்

பத்மா சரணம் சரணம் தாயே
பத்மா சரணம் சரணம்

வாசுகி சரணம் சரணம் தாயே
வாசுகி சரணம் சரணம்

நாகம்மா சரணம் சரணம் தாயே
நாகம்மா சரணம் சரணம்

*விமலா மணிவாசகன்*

# மகளான வாசுகித் தாய்

பல்லவி

வா வா வா வாசுகி – உன்
வாழ்வு முடிந்தது என நாகலோகம் சென்றாயோ
வண்ண வடிவு கொண்டே என்மடியில் தவழ்ந்தாயே – உன்
வண்ண முகம் காண ஏங்குகின்றேன் அம்மா ஏங்குகின்றேன் (வா)

அனு பல்லவி

வண்ண மயில்போல் ஆடுகின்றவள் – உன்னிடம்
வருபவருக்கு வரம் அளிக்கின்றவள்
வஞ்சக நெஞ்சினருக்கு நஞ்சானவள் – அவர்கள்
வருந்தி அழைக்கவே அருள் புரிகின்றவள் (வா)

சரணம்

எங்கள் வீடு தேடி வந்தே உன்னிடம் அழைத்தாயே
நாங்கள் நயினாதீவில் சாந்தி செய்து வேண்டவே – நீயும்
மனமுவந்து எங்களுக்கு மகளாய் வந்தாயே
மகளின் நோய் தீர உனக்கு அபிஷேகம் செய்யவே
நீயும் நாகமாக வந்து நேரில் ஏற்றாயே
நம்பாத என்னையும் நம்பவைத்தாயே
நாடிவந்த என்னையும் நாடவைத்தாயே
சிந்தாமணித் தாயே வாசுகியே (வா)

நான் நீர் ஆனாலும் நயினைக் கடலில் நீராவேன்
நான் நெல்லானாலும் சிந்தாமணியில் நெல்லாவேன்
நான் கல்லானாலும் உன் உருவம் செய்யும் கல்லாவேன்
நான் புற்றானாலும் நீ வாழும் புற்றாவேன்
நான் மரமானாலும் உனக்கு நிழல்தரும் மரமாவேன்
என் உயிருள்ளவரை நானுன்னை மறவேன் வாசுகி
கடல் சூழ்ந்த நயினாதீவில் இருப்பவளே நாகபூஷணி
வயல் சூழ்ந்த சிந்தாமணியில் இருப்பவளே நாகம்மா (வா)

*விமலா மணிவாசகன்*

# Memory

Muse of Memory lays bare
Pages of the past-
Some are bright
And some cloudy,
Some so misty
And even frosty-
Yet many are bright
With song and laughter.
Reels of spent time
Racing through
A pensive mind,
When Memory
Points to each line
Recalling the joys
The delights,
The successess, the failures,
The elation and frustration
Endured in life.
Unhappy thoughts
Linger unwanted,
Pulling the strings
Of an aching heart
Keeping raw the twitching pains!
No cancel key nor a delete command
The world over.
Can blot a scene of it
For alas!
None can choose and remember!

**By Thilaka Vivekanandhan Wijeyaratnam**

# வாழிய வாழியவே

நல்லைக் கந்தன் தேர் போலொன்றை
அமைக்க எண்ணிய நன்மக்களவர்
வாழிய என்றும் வாழியவே!

தங்கத்தேரதை ஆக்க மனமுவந்து
தங்கந் தந்துதவிய பெரு மக்களவர்
வாழிய என்றும் வாழியவே!

திருப்பணி தன்னைத் தொடக்கி வைத்த
சீர் சபைத்தலைவர் தொண்டரவர்
வாழிய என்றும் வாழியவே!

கந்தன் தேர் உருவத் தவமிருந்து பின்னே
இராப்பகலாய் உழைத்தோரவர்
வாழிய என்றும் வாழியவே!

ஸ்கந்தனவன் தேரை நன்கு வடிவமைத்த
ஸ்தபதி குழுவிரைவர்
வாழிய என்றும் வாழியவே!

கொம்பனித்தெரு வள்ளலவன் தேரிலேறி வருகையிலே
கொஞ்சு மயில் போலாடியோரவர்
வாழிய என்றும் வாழியவே!

சிவசுப்பிரமணிய சுவாமி நீ சிறப்பாகப் பவனி வந்து
சிந்தை உன்பால் அடகு வைத்த அடியார்க்கருளி
நாட்டிலே சுபிட்சம் நன்மைகளும் வற்றாது பெருகவே
நல்கின நல்லவனே முருகனே நின்
பாதம் போற்றி போற்றி!

*ஆக்கம் –*
*திலகா விவேகானந்தன் –விஜயரத்தினம்*

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம்
# கொழும்புக்கிளை

நான்காம் ஆண்டு (1997) அறிக்கை

**25.01.1997 தொடக்கம் 24.01.1998 வரையும்**

சங்கத்தின் மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 1997 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி கொழும்பு 3, டீல் பிளேஸ் ஏ, 24ஆம் இலக்கத்தில் இருக்கும் திருமதி அபிராமி கயிலாசப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு 20 அங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர். நடப்பு ஆண்டின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் – திருமதி புஷ்பம் சுப்பிரமணியம்.

*தெரிவு செய்யப்பட்ட நிர்வாகக்குழு*

| | | |
|---|---|---|
| தலைவி | – | செல்வி சற்சொரூபவதி நாதன். |
| உபதலைவர்கள் | – | திருமதி இந்திராணி சோமசுந்தரம். |
| | ☆ | திருமதி இராஜகுமாரி கதிர்காமநாதன். |
| | ☆ | திருமதி பொன்மலர் கந்தசாமி. |
| பொதுச்செயலாளர்கள் | – | திருமதி சிவகாமி அம்பலவாணர். |
| உதவிச்செயலாளர்கள் | – | திருமதி தயாநிதி செல்வநாயகம். |
| | ☆ | திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம். |
| பொருளாளர் | – | திருமதி அபிராமி கைலாசபிள்ளை. |
| உதவிப்பொருளாளர் | ☆ | திருமதி கௌரி தேவசேனாதிபதி. |
| நிர்வாகக் குழுவினர் | – | திருமதி நாகராஜேஸ்வரி அலெக்ஸ்சாண்டர். |
| | | திருமதி ருக்மணி அரசரத்தினம். |
| | – | திருமதி ஞானலஷ்மி பாலசிங்கம். |
| | ☆ | செல்வி சீதா செல்லையா. |
| | ☆ | திருமதி மகேஸ்வரி கணேஷமூர்த்தி. |
| | ☆ | திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம். |
| | ☆ | திருமதி நாகேஸ்வரி கனகசபை. |
| | ☆ | திருமதி விமலா மணிவாசகன். |

★ திருமதி நந்தினி மோகன்.
★ திருமதி யோகேஸ்வரி (சுந்திரா) பரமேஸ்வரன்.
★ திருமதி சீதா பொன்னுத்துரை.
★ திருமதி மல்லிகாதேவி சரவணபவான்.
★ திருமதி புவனேஸ்வரி சத்தியநாதன்.
★ திருமதி கோமளாம்பாள் செல்வரத்தினம்.
★ திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கம்.
★ திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன்.
★ திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ்.
★ திருமதி பத்மா சோமகாந்தன்.
★ திருமதி நாகபூஷணி சுப்பிரமணியம்.
★ செல்வி சிவமலர் சுப்பிரமணியம்.
★ செல்வி பிருந்தா தவக்குமாரன்.
★ திருமதி தற்பராதேவி தில்லைநாதன்.
★ திருமதி குகஜோதி விஜயநாயகம்.
★ திருமதி திலகா விஜயரத்தினம்.
★ திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்.

மீள் பரிசோதகர் – ரீ. அலெக்ஸாண்டர் அன்ட் கம்பனி.

நாங்கள் அனுப்பிய யாழ்நாதம் இதழ் 2 பிரதிகள் பத்தும் கிடைத்ததாக எங்கள் கல்லூரி அதிபர் 07.01.1997 திகதி கடிதம் மூலம் தெரிவித்திருந்தார்.

எங்கள் கல்லூரிக்கு ஆங்கில தட்டச்சுப் பொறியும் நீர் இறைக்கும் இயந்திரமும் வாங்குவதற்கு நிதி திரட்டுவதற்காக நடத்த உத்தேசித்துள்ள மலிவு விற்பனை பற்றி கலந்துரையாடுவதற்காக ஒரு பொதுக்கூட்டம் 1997 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 15ஆம் திகதி கொழும்பு 3, டீல் பிளேஸ் 24ஆம் இலக்க இல்லத்தில் வைத்தோம். இக்கூட்டத்திற்கு 16 அங்கத்தவர்கள் வந்திருந்தனர்.

மலிவு விற்பனையை 22.02.1997 சனிக்கிழமை காலை 10.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை இராமகிருஷ்ண மிஷன் சிறிய மண்டபத்தில் நடத்தினோம். விற்பனைக்கு எங்கள் சங்க அங்கத்தவர்கள் பலர் உணவு, சிற்றுண்டி பொருட்கள் முதலியன இலவசமாக தந்து உதவினார்கள். இந்த மலிவு விற்பனைக்கு திரு திருமதி தவயோகராஜா அவர்கள் பிரதம அதிதிகளாக வருகை தந்து கணிசமான தொகையை அன்பளிப்பாக தந்தார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். மேலும் விற்பனையை சிறப்பாக நடத்துவதற்கு உதவிய அங்கத்தவர்கள் எல்லோருக்கும்

முக்கியமாக இந்த மலிவு விற்பனையை ஒழுங்கு செய்த திருமதி கயிலாசபிள்ளைக்கும் எமது பாராட்டுகளைத் தெரிவிக்கிறோம். கல்லூரி அதிபர் 03.03.1997 திகதி கடிதம் மூலம் நீர் இறைக்கும் இயந்திரம் ரூபா 25,000.00 இற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மூலம் வாங்கக்கூடியதாக இருக்கின்றது எனத் தெரிவித்திருந்தார். எனவே எங்கள் சங்கம் இதற்காக பணஉதவி செய்யத்தேவையில்லை எனவும் எழுதியிருந்தார்.

மேலும் அதிபர் 23.04.1997 திகதி கடிதத்தில் எங்கள் சங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட தமிழ் தட்டச்சுப்பொறி (Tamil Typewriter Model Olympia SG3 with 18 inch carriage, polythene cover, a pair of scissors and erasor), மருந்தடிக்கும் கருவி (sprayer), பிரதிசெய்யும் இயந்திரம் (Roneo Machine - Model Cyklos M 212) ஆகியவை கிடைக்கப்பெற்றதாக அறிவித்திருந்தார்.

நாங்கள் 30.04.1997 ஆங்கில தட்டச்சுப்பொறி (Model Olympia SG3N with 18 inch carriage and polythene cover) Lanka General Trading Company Limited, 100 Navam Mawatha, Colombo 02 இல் ரூபா 21,045.00 இற்கு வாங்கினோம். கல்லூரி நூல் நிலையத்திற்கு அனுப்பும் பொருட்டு எங்கள் சங்க அங்கத்தவர்கள் பாவித்த பாடபுத்தகங்கள் உள்பட 23 புத்தகங்களை அன்பளிப்புச் செய்திருந்தார்கள். ஆங்கில தட்டச்சுப்பொறியையும் இப்புத்தகங்களையும் நாங்கள் மே மாதம் 1ஆம் திகதி திரு கனகரத்தினம் அவர்களின் காரியாலயத்தில் கையளித்தோம்.

இந்திய உயர் ஸ்தானிகள், இந்து வித்தியாவிருத்திச் சபை, ஆசிய தர்மஸ்தாபனம் ஆகியவற்றிற்கு எங்கள் கல்லூரிக்குத் தேவையான உபகரணங்கள் நூல்கள் தந்து உதவுமாறு விண்ணப்பித்து இருக்கிறோம். 13.05.97 வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை தலைவர் இந்து வித்தியாவிருத்திச்சபை "THE CULT OF SIVA with special reference to the dances of Siva by Tambyah Nadaraja" என்ற புத்தகத்தை கல்லூரிக்கு அனுப்பும் பொருட்டு அன்பளிப்புச் செய்தார்.

யாழ்நாதம் இதழ் 3 அட்டைப்படத்திற்கு செல்வி இராமநாதனின் படம் பொருந்திய கடிதஉறை ஒன்று அனுப்பியிருந்தார்.

பாடசாலையில் இருந்த ஜெனரேற்றர், அம்பிளிவையர் செற் ஆகியவை இடப்பெயர்வின்போது களவாடப்பட்டுவிட்டன என எழுதியிருந்தார். கணனியும் ஜெனரேற்றரும் அரசாங்கத்தால் தருவார்கள் என எதிர்பார்க்கிறார்கள். பிரார்த்தனைகளை நடத்துவதற்கும் ஏனைய தேவைகட்கும் ஒலிபரப்பு சாதனம்

இல்லாதது பெரும் குறைபாடாக உள்ளது எனவும் எங்களது நிதிநிலைமை சாதகமாக இருக்கும் பொழுது அதனைக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிக்கும்படியும் தெரிவித்திருந்தார்.

இக்கடிதத்துடன் நடுத்தோட்ட விநாயகரின் விபூதியும் அனுப்பியிருந்தார். ஆனால் விபூதி எங்களுக்கு கிடைக்கவில்லை. கடிதம் உடைத்து staple போட்டிருந்தார்கள். இதை நாம் அதிபருக்கு அறிவித்தோம். 29.05.1997 எழுதிய கடிதத்துடன் அனுப்பிய விபூதி கிடைக்கப்பெற்றோம்.

நம்மவர் நடத்தும் அரட்டையர் அரங்கம் ஒன்று 09.08.97 சனிக்கிழமை பி.ப 4.00 மணிக்கு கொழும்பு 4, லொறன்ஸ் வீதி 75ஆம் இலக்க இல்லத்தில்லுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடத்தினோம். அதன் விபரம் பின்வருமாறு.

பொருள் – இன்றைய காலகட்டத்தில் குடும்பப்பாரத்தை கூடுதலாகச் சுமப்பது கணவனா அல்லது மனைவியா?

| | | |
|---|---|---|
| நடத்தியவர் | – | செல்வி சற்சொரூபவதி நாதன் |
| கணவன் என வாதிட்டவர்கள் | – | திருமதி இந்திராணி சோமசுந்தரம் |
| | – | திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் |
| | – | திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷ் |
| | – | திருமதி விமலா மணிவாசகன் |
| மனைவி என வாதிட்டவர்கள் | – | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| | – | திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| | – | செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| | – | திருமதி பொன்மலர் கந்தசாமி |

இந்த அரட்டையர் அரங்கத்தை எங்கள் கல்லூரிப் பழைய மாணவியாகிய திருமதி ஜெயசீலன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார். அத்துடன் அவர் யாழ்நாதம் இதழ் 3 றையும் வெளியிட்டு வைத்தார்.

யாழ்நாதம் இதழ் 3 இல் திருமதி திலகவதி வீரசிங்கம் எழுதிய நாலுகோடிப் பாடல் என்ற கட்டுரை மிக நன்றாக இருக்கிறது என மங்கை ஆசிரியர் அபிப்பிராயம் தெரிவித்தார். அத்துடன் அவர் அந்தக் கட்டுரையை 1997ஆம் ஆண்டு அக்டோபர் மாத மங்கை இதழில் பிரசுரித்திருந்தார். திருமதி திலகவதி வீரசிங்கத்திற்கு எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறோம். மங்கை ஆசிரியருக்கு எமது நன்றிகள்.

அதிபர் 11.08.1997 எழுதிய கடிதத்தில் நாங்கள் அனுப்பிய ஆங்கில தட்டச்சுப்பொறி, மருந்து தெளிக்கும் கருவி, 23 புத்தகங்கள் என்பன கிடைத்ததாகத்

தெரிவித்திருந்தார். நாங்கள் அனுப்பிய பொருட்களை பொறுபபேற்று எங்கள் கல்லூரியில் சேர்ப்பித்தமைக்கு நாங்கள் திரு பரமேஸ்வரன் அவர்கட்கும் திரு கனகரத்தினம் அவர்கட்கும் மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

அமைதிக்கான மில்லியன் எண்ணங்கள் செயலாக்க ஆலோசனைக் குழுவினரும் இலங்கை பிரம்ம குமாரிகள் ராஜயோக நிலையத்தினரும் ஒழுங்கு செய்த அமைதிக்கான மில்லியன் எண்ணங்கள் தேசிய நிகழ்ச்சியிலும் எங்கள் சங்க அங்கத்தவர்கள் சிலர் கலந்து கொண்டார்கள்.

சங்கத்தின் 4வது நடப்பு ஆண்டில் நடைபெற்ற செயற்குழுக்கூட்டங்கள்.

| திகதி | இடம் | வரவு |
|---|---|---|
| 05.04.1997 | 61/2 அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு 3 | 13 |
| 17.05.1997 | 61/2 அப்துல் கபூர் மாவத்தை,கொழும்பு 3 | 8 |
| 19.07.1997 | 61/2 அப்துல் கபூர் மாவத்தை, கொழும்பு 3 | 10 |
| 29.11.1997 | சரஸ்வதி மண்டபம், 75, லொறன்ஸ் வீதி கொழும்பு 3 | 10 |

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக மீள் பரிசோதனை (Audit) செய்து தந்த ரீ. அலெக்ஸாண்டர் அன்ட் கம்பனி, ரீ 3/7, Anderson Flats, கொழும்பு 5, இற்கும், இதை ஒழுங்கு செய்த திருமதி நாகராஜேஸ்வரி அலெக்ஸாண்டருக்கும் எங்கள் சங்கத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுவரைகாலமும் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவிக்கும் நிர்வாகக் குழு அங்கத்தவர்களுக்கும் நான் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நாட்டு நிலைமை காரணமாகவும், பொருளாதாரம் காரணமாகவும் எங்கள் சங்கநிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளும் அங்கத்தவர் தொகை குறைந்துகொண்டு வருகின்றது. எனவே இன்று பதவியேற்க இருக்கும் புதிய நிர்வாகக்குழுவில் பல புதிய அங்கத்தவர்கள் சேர்ந்து பணிபுரிவார்கள் என நம்புகிறேன். புதிய நிர்வாகக்குழு திறம்பட செயல்புரிய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**திருமதி சிவகாமி அம்பலவாணர்**
*கௌரவ செயலாளர்*
*24.01.1997.*

# யாழ்.இந்துமகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்பு கிளையின் செய்திகள்.

## யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளை உதயம்

*காசி நவரத்தினம்*

யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தின் கொழும்புக்கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டம் அண்மையில் கொழும்பு இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கொழும்புக் கிளையின் தலைவராக சற்சொரூபவதி நாதனும், செயலாளராக திருமதி தயாநிதி செல்வ நாயகமும், பொருளாளராக ராஜகுமாரி கதிர்காமநாதனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியையான புஷ்பம் சுப்பிரமணியத்தின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் செல்வரத்தினம் பரமானந்தம் வழங்கிய ஆரம்ப அன்பளிப்புடன் நன்கொடை நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்லூரியின் வளர்ச்சியிலும் சங்கத்தில் சேர்ந்து உழைப்பதிலும் ஆர்வம் உள்ளவர்கள் (சங்கத்துடன் வெள்ளவத்தை சர்வதேச பௌத்த மத்தியஸ்த நிலைய வீதியில் 4 ஏ,இலக்க இல்லத்தில் வசிக்கும் செயலாளர் திருமதி செல்வநாயகத்துடன்) தொடர்பு கொள்ளலாமென கேட்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் பொன் விழாவை செப்டம்பர் மாதம் 10 ஆம் திகதி கொழும்பிலும் கொண்டாடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

*Page 13: Virakesari Monday 30th August 1993*

அன்பனே!

உனது செல்வம் அழியாமலிருக்க வேண்டுமானால் நீ மூன்று காரியங்களைச் செய்யாமலிருக்க வேண்டும்.

1. ஏழைகள் கண்களிலிருந்து நீர் வரவொட்டாமல் நடந்துகொள்.
2. பிறருடைய பொருள் உனக்கு வரவேண்டுமென்று கனவிலும் கருதாதே.
3. நியாயம் அல்லாத வழியில் பொருளைச் சேர்க்காதே.

*தொகுப்பு – அன்பன் கிருபானந்தவாரி*

# ஐம்பது வருட காலம் தலைசிறந்து விளங்கும் யாழ். இந்து மகளிர் கல்லூரி

பொன்விழா வைபவத்தில் பழைய மாணவியர் சங்கம் பாராட்டு

(பற்றீஷியா ஆரோக்கியநாதர்)

தமிழ் மக்கள் அதுவும் யாழ்ப்பாணத்து மக்கள் பல்லாண்டு காலமாக கல்வியால் வந்த புகழையே பெற்று பெருமை கண்டனர். இதற்கு அங்குள்ள கல்வி நிலையங்களே காரணமாக இருந்தன. இருந்தும் வருகின்றன. அவற்றுள் பெண்களுக்கான கல்லூரியில் தலைசிறந்த கல்லூரியாக கடந்த 50 ஆண்டு காலமாக இயங்கி வருவது யாழ் இந்து மகளிர் கல்லூரியாகும். அக்கல்லூரியில் கல்வி கற்கும் பேறு பெற்ற நாம், அக்கல்லூரியின் பொன் விழாவிலும் பங்கு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

இவ்வாறு யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்க கொழும்புக் கிளையின் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன், தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி வெஜிலன்ட் ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொன் விழாவை முன்னிட்டு கல்லூரியின் பழைய மாணவிகள் சங்க கொழும்பு கிளை ஏற்பாடு செய்த மதிய போசன விருந்தின் போது உரையாற்றிய சற்சொரூபவதி நாதன் மேலும் பேசியதாவது–

"1943 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா யாழ்நகரில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

இன்றைய பொன்னாளில் அனைவரும் ஒன்ற சேர வித்திட்ட பெருமை பழம்பெரும் ஆசிரியையும், கல்லூரியின் ஆரம்ப காலத்தில் கல்விகற்பித்தவருமாகன திருமதி புஸ்பம் சுப்பிரமணியத்தையே சாரும். திருமதி லீலா நாகரெட்ணம், திருமதி செல்வரட்னம் பரமானந்தன், செல்வி ராதா சோமசுந்தரம உட்பட இன்னும் பல ஆசிரியர்களும் இன்று எம் மத்தியில் இருப்பதும் மகிழ்ச்சிக்குரியதாகும்.

கல்லூரியின் ஆரம்ப கால ஆசிரியையான திருமதி புஷ்பம் சுப்பரமணியம் தனது உரையில், "திண்ணைப் பள்ளியாக தொடங்கிய பாடசாலை 1946 இல் ஓலைக் கொட்டிலில் இயங்கத்தொடங்கியது. சைவப் பெருந்தகைகள், பெரியோர்,

பெற்றோர் ஆதரவில் மிக விரைவாக இப்பாடசாலை வளர்ந்தோங்கியது. பற்றைக்காடாகக் காட்சியளித்த கல்லூரித் திடல் இன்று கற்களாலான மண்டபமாகத் திகழ்கின்றது எனக் கூறினார்.

திருமதி லீலா நாகரெட்னம் தனது உரையில், "1943 ஆம் ஆண்டில் 8 ஆசிரியர், 110 மாணவிகளுடன் ஓலைக் கொட்டிலில் ஆரம்பித்த கல்விக்கூடம் இன்று பொன்விழாக் காணுகின்றது. அன்று கல்லூரி வளவில் குனிந்து, குனிந்து கற்கள் பொறுக்கி, புல் பிடுங்கியது இன்றும் இனிய நினைவுகளாக இருக்கிறது. இன்று சகலரையும் கொழும்பில் சந்திக்கும் வாய்ப்பு எமக்கு கிட்டியுள்ளது. இறைவனுக்கும் மற்றும் விழாவை ஒழுங்கு செய்திருந்த சகல அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறி, மேலும் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டார்.

கல்லூரியின் இயல், இசை கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்த செல்வி ராதா சோமசுந்தரம் தனது உரையில், இந்துக்கல்லூரி மாணவிகளின் கலை வளர்ச்சி, விசாலாட்சி சிவகுருநாதன் மண்டபத்தில், எவ்வாறு அமைந்திருந்ததை எடுத்துக் கூறி பெற்றோர், பழைய மாணவிகளின் விடாமுயற்சியினால் கல்லூரி வளர்ச்சியடைய வாழ்த்தினார்கள்.

பொன்விழாவை திருமதி திருச்சிற்றம்பலம் தேவாரம் பாடி ஆரம்பித்து வைத்தார். திருமதி தயாநிதி செல்வநாயகம் நன்றியுரை நிகழ்த்தினார்.

மதிய விருந்தின்போது பலரும் கல்லூரிக்கால வாழ்க்கை பற்றி உரையாற்றி சங்கீதம் இசைத்து விழாவைச் சிறப்பித்தனர்.

**வீரகேசரி** *12th September, 1993.*

*அன்பனே!*
*கண்ணுக்கு அணிகலம் (ஆபரணம்)*
*கண்ணோட்டம் (தாட்சண்யம்)*
*காதுக்கு அணிகலம் நல்ல கேள்வி*
*வாக்குக்கு அணிகலம் சத்தியம்*
*கருத்துக்கு அணிகலம் தான தர்மம்*
*மனத்துக்கு அணிகலம் தியானம்*

*தொகுப்பு - அன்பன் கிருபானந்தவாரி*

# பொன்விழாக்காணும் யாழ். இந்து மகளிர் கல்லூரி

தலைவரின் செய்தி
செல்வி சற்சொரூபவதி நாதன்

நல்ல தமிழை நல்ல முறையில் கற்று நான்கு பேர் போற்றிப்புகழ்ந்திட நாடெங்கும் வானலைகளில் அதனைத் தவழவிட்டு அறிவிப்பாளராக அனைவருக்கும் அறிமுகமாகி இன்று கிளைச்சங்கத் தலைவராகும் தகுதி பெற்றேனெனில் அதற்கு என் திறமை தான் காரணமல்ல. அந்தத் திறமையை வெளிக்கொணர்ந்து வளர்வதற்கு வலுவான உரமிட்டு என்னை விஞ்ஞானப்பட்டதாரியாகவும் மிளிரச் செய்த என் கல்லூரிக்கே அந்தப் பெருமை.

என்னைப்போன்று எண்ணற்ற பெண்களைத் தலைநிமிர்ந்து நடைபோட வைத்த எம் கல்லூரி பொன் விழாக் காண்கிறது. யாழ் நகரில் பழைய மாணவிகளின் தாய்ச்சங்கம் சீராகச் செயற்படும் அதே வேளையில், கொழும்பு நகரில் அதன் கிளையை அமைத்துப் பழைய மாணவிகளாகிய நாம் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ளோம். எமது பணி செவ்வனே நடைபெறுவதற்கு, ஆசான்களாக எமக்கு அறிவூட்டியவர்களின் ஆசியை யாசிக்கின்றோம். பழைய மாணவிகள் பலரும் அங்கத்துவம் பெற்று அயராது உழைக்க வேண்டும் என்று அன்புடன் அழைக்கின்றோம்.

## செயலாளரின் செய்தி.

*திருமதி தயாநிதி செல்வநாயகம்*

யாழ். இந்து மகளிர் கல்லூரி எனும் ஆலவிருட்சத்திற்கு இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவெய்துவதை நினைத்து உள்ளம் பேருவகை கொள்கிறது. இவ்வால விருட்சத்தின் நிழலில் ஒதுங்கிய சிற்றெறும்பு என்ற வகையிலும், அதன் அரவணைப்பிலிருந்து வெளியேறிய பட்டதாரி என்ற வகையிலும் நான் பெருமையடைகிறேன்.

கல்விதந்து எம்மை ஆளாக்கிய தோடல்லாமல் நல்ல மனிதர்களாக எம்மை, இன்றுவரை, எம் அடிமனதிலிருந்து வழிநடத்திச் செல்லும் இக்கல்லூரித் தாய்க்கு ஐம்பதாவது பிறந்த நாள் வாழ்த்து தெரிவிக்கும் ஆயிரமாயிரம் சகோதரிகளுடன் நானும் இணைந்து கொள்கிறேன்.

எமது கல்லூரிக்கு எம்மாலான சிற்றூழியம் செய்வதற்கேதுவாக கொழும்பில் பழைய மாணவிகள்

சங்கக்கிளை ஒன்றைப் பலரதும் முயற்சியால் ஆரம்பித்திருப்பதை அறிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். சகோதரிகள் யாவரும் இக்கிளையின் வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் உறுதுணையாக இருப்பார்கள் என நம்புகிறேன்.

இந்து மகளிர் கல்லூரி கற்றுத் தந்த பண்பாடு எமது குடும்பத்தின் உயர்வில் பிரதி பலிப்பதைக் கண்ணுற்று நான் மகிழ்ச்சியடைகிறேன்.

*இந்திராணி சோமசுந்தரம்*

*(உப தலைவர்)*

கலியுகத்தில் கடும் சோதனைகளை எதிர்நோக்கும் காலகட்டங்களில் எல்லாம், பதறாது நெறிதவறாது, பண்புடனும் பாசத்துடனும் தம்பு மாஸ்டர் குடும்பத்தினர் நடந்து கொள்ள, என் பங்கைச் சரிவர ஆற்ற வைத்த எனது கல்லூரிக்கு என் பாச முத்தங்கள்.

*சந்திரா பரமேஸ்வரன்*

*(உப தலைவர்)*

இந்து மதக் கோட்பாடுகளை அனுசரித்து தொழில் வல்லுநரும், சமய, சமூக, சேவையாளருமான என் கணவரின் பணிகளில் ஒத்துழைத்து அரும் பணி ஆற்றும் வல்லமைக்கு என் கல்லூரியே அடித்தளம் அமைத்தது.

*அபிராமி கைலாசபிள்ளை*

*(உபதலைவர்)*

விஞ்ஞானத் துறையில் வியத்தகு சாதனைகளை நான் எய்த வித்திட்டது இக்கல்லூரி. இலங்கைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்திற்கு கல்லூரி யிலிருந்து அனுமதி பெற்ற முதலிரு மாணவிகளில் நான் ஒருத்தி. இங்கிலாந்து மன்செஸ்டர் பல்கலைக்கழக முதுமாணிப்பட்டம், இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்க அங்கத்துவம், இலங்கை இரசாயன மன்ற இராசாயன துறைத்தகுதி, தனியார் துறை ஆய்வு கூடத்தில் பிரதம ஆய்வாளர் பதவி இத்தனைக்கும் அத்திவாரமிட்டது என் கல்லூரி.

*சிவகாமி அம்பலவாணர்*

*(உப செயவாளர்)*

ஆங்கில மொழியறிவு, ஆன்மீக நாட்டம் இவற்றுடன் விளையாட்டுத் துறையில், அதிலும் அன்று பெற்ற சைக்கிள் ஓட்டப்பயிற்சி என்னை இன்றும் கல்லூரியை நினைக்க வைக்கின்றது.

*ராஜகுமாரி கதிர்காமநாதன்*

*(பெருளாளர்)*

எதிர் நீச்சல் போட எனக்கு ஆற்றல் தந்தது. என்றும் இன்முகத்துடன் பழக இனிய பண்பை கற்றுத் தந்தது.

*சிவமலர் சுப்பிரமணியம்*

*(உப பொருளாளர்)*

## உறுப்பினர்கள்

யாழ் நகரில் தாய்ச்சங்கம் உருவாக உழைத்தேன். இன்று

தலைநகரில் சேய்ச்சங்கம் பொன்விழாவெடுக்கக் காண்கிறேன். அறிவு புகட்டிய அன்னைக்கு செலுத்தும் நன்றிக்கடனில் எனக்கு நிச்சயம் பங்குண்டு.

*மனோன்மணி அருணாசலம்.*

இப்பொன்நாளில் கல்லூரியின் தரம் உயர்த்திய கல்லூரி அதிபர் திருமதி ராவோவை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

*பொன்மலர் கந்தசாமி*

மொழித் துறையா, விளையாட்டுத்துறையா, நாடகத் துறையா இசைத்துறையா எல்லாவற்றிலும் எனக்கு முதவிடம் தந்த கல்லூரி. வாழ்க்கையில் சகிப்புத் தன்மையைப் பேணவும் பயிற்சி தந்தது.

*குகஜோதி விஜயநாயகம்*

இந்து சமயப் பணியில் இரவும் பகலுமாக இன்று உழைக்கின்றேன் என்றால், இனிய மொழி பேசுகின்றேன் என்று பாராட்டப்படுகின்றேன் என்றால் அதற்கு ஆதாரமானது என் கல்லூரியே.

*மல்லிகாதேவி சரவணபவான்*

வெளிநாடு சென்று பலவருடம் தொழில் புரிந்தாலும் எம் பண்பாட்டை கைவிடாது வாழ முடிந்ததையிட்டு நான் அடையும் பெருமிதம் என் கல்லூரிக்கே உரித்தாகும்.

*மகேஸ்வரி கணேஷமூர்த்தி*

எதற்கும் அசைந்து கொடுக்காத அறிவியல் அத்திவாரத்தை அமைத்து ஆசிரியத் தகைமைகளை தந்த கல்லூரியை மறக்க முடியாது.

*திலகா விஜயரட்ணம்*

சமய நெறியையும், தமிழ்ப் பண்பாட்டையும் அறிந்து கடைப்பிடிக்க ஆதாரக் கல்வி புகட்டியது என் கல்லூரி.

*கமலா நாகேந்திரா*

ஓவியக் கலையில் உயர்வு பெற்று அளுத்கம ஆசிரியப்பயிற்சிக் கல்லூரியில் ஆசான்களுக்கு ஆசானாக 24 வயதிலேயே என்னை அமர்த்தியமை. மாணவர்களிடையே பாகுபாடு அற்று திறமைதனை ஊக்குவித்த வழி காட்டியமை இத்தனை பெருமையும் என் கல்லூரிக்கே.

*இரத்னாவதி திருச்செல்வம்.*

கல்விகற்ற கல்லூரியிலேயே கணிதத்துறை ஆசிரியையாகி நன்றிக்கடன் செலுத்தக் கிடைத்த வாய்ப்பினையிட்டு பூரிக்கிறேன்.

*ஜெயதேவி சிவகுருநாதன்*

என்தாயும் நானும் கற்ற கல்லூரி இருதலைமுறை என்பதால் இரட்டிப்பு நன்றி.

*மதுரா தில்லைநாதன்*

பெண்ணின் பெருமையை நிலைநாட்டும் பண்பும் பொறுமையும் திறமையும் நான் பெற்ற செல்வங்கள்

*திருவருட் செல்வி மயில்வாகனம்*

மனதில் உறுதிவேண்டும் என்பர், அதனை என் ஆசிரியர்கள் எனக்குத் தந்துள்ளார்கள்.

*மோகனராணி குகதாசன்*

குடும்ப விளக்காக சுடர்விட ஒளிதந்த என் கல்லூரி.

*அகிலா விஜயேந்திரா.*

நாம் பெற்ற கல்வி நம் பிள்ளைகளை பல்துறைகளிலும் வல்லவர்களாக்க வழி வகுத்தது.

*நாகபூஷணி சுப்பிரமணியம்*

*புவனேஸ்வரி யோகலிங்கம்.*

பந்தாடும் பாவையாக பந்தயங்களில் வெற்றி பெற விளையாட்டில் வீராங்கனையாக வீரப்பதக்கங்கள் பெற பயிற்சிகள் அளித்த பாசமிகு பாடசாலை.

*லீலா பாலசிங்கம்*

எதிர்கால வளத்திற்கு என்னைத் தயாராக்கி விட்டது.

*ஸ்ரீபானு சாம்பசிவம்*

பல்கலைகளையும் நல்ல பழக்க வழக்கங்களையும் கற்றுத் தந்த கல்லூரி.

*திருமகள் கருணையானந்தன்.*

என்னை விஞ்ஞானப் பட்டதாரியாக்கி இன்று வழக்கறிஞராகிய என் கணவருக்கு தொழில் ரீதியாகவும் துணைபுரிய வைத்து எமது கல்லூரியே

*கௌரி தேவசேனாதிபதி*

வீணா கானம் இசைத்து இசையுலகில் பிரகாசிக்க அன்னை கலைவாணியின் அருள்பெற உதவிய கல்லூரிக்கு நன்றி.

*லீலாவதி இரத்தினசிங்கம்*

தமிழ் அறிவுடன் பக்தி நெறியில் வாழவைத்த கல்லூரி.

*கலைவாணி ராஜரட்ணம்*

நான் கற்பிப்பது ஆங்கிலம், பேணுவது தமிழ்ப் பண்பாடு இத்தகைமைக்கு நன்றி.

*பரமேஸ்வரி பாலசிங்கம்.*

கல்வித்துறையில் மேன்மேலும் வளர்ச்சிகாண நல்லதொரு வித்தினை நாட்டிவிட்டது இக்கல்லூரி.

*நிரஞ்சலிகா நித்தியானந்தன்*

உயர்கல்விப் படிப்பைத் தொடர்கிறேன் என்றால் நான் இக்கல்லூரியில் பெற்ற பயிற்சியே காரணம்.

*கோதை கமலேந்திரன்.*

இன்றைய தலைமுறையின் இளஞ்சிட்டுக்களாகிய நாம், கல்லூரியின் பெயரைச் சொன்னவுடனேயே, அறிமுகமாகி விடுகிறோம். இதை விடப்பெருமை என்ன!

*வத்ஸலா மகாதேவன்.*

*(வீரகேசரி 12.09.1998 வாரவெளியீடு பக்கம் 11)*

# 1. யாழ்நாதம்

யாழ்நாதம் 'காலாண்டு சஞ்சிகை' யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையின் வெளியீடாகும்.

மேற்படி சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் திருமதி சிவகாமி அம்பலவாணர். 7 பேர் கொண்ட ஆசிரியர் குழுவும் இதில் கடமையாற்றுகிறது. தலைவி சற்சொரூபவதிநாதனின் ஆசிச் செய்தியுடன் சஞ்சிகை ஆரம்பமாகிறது. இச்சஞ்சிகையில் கட்டுரைகள், சிறுகதைகள், துணுக்குகள், செய்திகள் என்பன இடம்பெற்றுள்ளன.

இடையிடையே பாரதியாரின் கவிதைகளை புகுத்தியுள்ளமை புதுமையானதாகும்.

"மினி பஸ்ஸில் ஒரு மின்மினி" இது இதழில் இடம் பெற்றுள்ள முதலாவது கட்டுரை. மின்மினி எனும் புனைப்பெயரில் இக்கட்டுரை வெளியாகியுள்ளது. மிகவும் நகைச்சுவை ததும்ப எழுதப்பட்டுள்ளதை பாராட்டலாம். பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்றவற்றில் இதே போன்ற மினிபஸ் அனுபவங்களை வைத்து பல கட்டுரைகள் வெளியாகியுள்ளதால் இது புதிதாக தோன்றவில்லை. எனினும் எழுத்து நயம் பாராட்டுக்குரியது.

திருமதி சத்தியலஷ்மி சிவலிங்கம் தமது "நினைவலைகள்" கட்டுரை மூலம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் மாணவியாக விளங்கிய பசுமையான நாள்களை நினைவு கூருகிறார்.

"The Rites And Rituals of a Hindu Wedding" எனும் ஆங்கில கட்டுரையில் இந்து திருமணங்களில் கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயங்கள், சடங்குகள் பற்றி விதந்துரைக்கப்படுகிறது. திருமதி தயாநிதி செல்வநாயகம் இதனை எழுதியுள்ளார். தாலியின் முக்கியத்துவம், மணவறை, அருந்ததி பார்த்தல், ஆசிர்வாதம் வழங்கல்போன்றவை பற்றி அவர் முக்கியமாக எடுத்துரைத்துள்ளார்.

சற்சொரூபவதி நாதனின் "இல்லத்திற்கு அப்பால்" கட்டுரை மிகவும் யதார்த்த பூர்வமாக எழுதப்பட்டுள்ளது.

பெண்கள் ஆண்களோடு சமமாக அரும்பெரும் பணிகளில் ஈடுபடுவதற்கு போராட்டக்கொடியை உயர்த்துவதற்கு முன்னதாக தங்களின் ஒரு பலவீனத்தைப் பற்றி நன்கு சிந்தித்து அதனைக் களைய முன்வர வேண்டும். இன்று "பெண் உலகின் முன்னேற்றத்திற்கு", "ஆண் உலகம்" என்று ஆவேசத்துடன் குரல் எழுப்பும் பெண்கள் தமது வர்க்கத்தினருடன் தாம் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைச் சிறிது சிந்தித்து பார்க்கவேண்டும் எனும் அர்த்தபூர்வமான வரிகள் பெண்களைக் கட்டாயம் சிந்திக்க வைக்கும்.

திருமதி பொன்மலர் கந்தசாமியின் "அன்பு வழி நடப்போம்" கட்டுரையில் "பிறருக்கு அன்பை வழங்கி அந்த அன்பினால் தான் வளர்ந்து பிறரையும் வளர்த்து ஒருவன் வாழ்வானானால் அதுவே ஓர் உன்னத கலையாகும்" எனக் கூறப்படுகிறது.

திருமதி அபிராமி கைலாசபிள்ளையின் 'பணம் பத்திரம்' கட்டுரை பணசேமிப்பு பற்றிய ஆலோசனைக் கட்டுரையாக அமைந்துள்ளது.

"கலைமகள் கைப்பொருள்" கட்டுரையில் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு வீணையின் சிறப்பு பற்றி எழுதியுள்ளார். திருமதி பரமேஸ்வரி பாலசிங்கத்தின் 'பூவையவள் பூப்பெய்தினாள்' கட்டுரையில் ஒரு பெண் பிறந்தது முதல் ருதுவாவது வரை விளக்கமாக கூறப்பட்டுள்ளது. பூப்புனித நீராட்டு விழாவுக்கு இந்துக்கள் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் என்பது குறித்து ஆசிரியர் அழகாக விளக்கியுள்ளார்.

திருமதி விமலா மணிவாசகனின் "பக்தியின் பலன்", திருமதி பத்மா சோமகாந்தனின் 'உயரப் பறந்தாலும்' ஆகிய இரு சிறுகதைகள் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. 'பக்தியின் பலன்' சிறுகதையின் நடைமனதைக் கவரவில்லை. இன்னும் திறம்பட அமைந்திருக்கலாம். 'உயரப் பறந்தாலும்' சிறுகதை வெளிநாட்டில் இருந்து மீண்டும் தாயகத்திற்கு திரும்பும் பெண்ணின் மனநிலை, தாயக மண்ணில் கால் பதித்தவுடன் ஏற்படும் உணர்வுகள், பழைய நினைவுகள் என்பதைப் பற்றி அனுபவ பூர்வமாக கூறியுள்ளது. இவை தவிர இன்னும் பல ஆக்கங்களும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன. எதிர் காலத்தில் 'யாழ்நாதம்' சஞ்சிகை இன்னும் பல புதிய அம்சங்களுடன் வெளிவரும் என நம்பலாம்.

இ.மீரா

*(வீரகேசரி சனிக்கிழமை பக்கம் 8 17th June 1995)*

*அன்பனே!*

*சிறந்த தீர்த்தம்*

*கங்கை நீர் சிறந்தது*

*அதனினும் சிறந்தது அபிஷேக நீர்*

*அதனினும் உயர்ந்தது, ஏழைகட்காக உழைக்கும் ஒரு*

*உத்தமனுடைய முகத்தில் துளிர்க்கும் வியர்வை நீர்*

*தொகுப்பு - அன்பன் கிருபானந்தவாரி*

# யாழ்நாதம்

'யாழ்நாதம்' சஞ்சிகை யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு கிளையின் வெளியீடாகும். இது இரண்டாவது இதழ். முதலாவது இதழ் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது. எம். ஆர். ராஜ்மோகன் சஞ்சிகையை வடிவமைத்துள்ளார்.

இதனைக் காலாண்டு சஞ்சிகையாக வெளியிடும் ஆர்வம் இருப்பதாக சங்கத் தலைவி சற்சொரூபவதி நாதன் இவ் இதழில் குறிப்பிட்டுள்ளார்.

இவ் இதழில் கட்டுரைகள், கவிதைகள், நகைச்சுவை துணுக்குகள், பாடல்கள், கல்லூரி வரலாறு, குறிப்புகள், புகைப்படங்கள் என பல்வேறு அம்சங்கள் அடங்கியுள்ளன எனினும் இதில் ஓர் சிறுகதை இல்லாதது பெரும் குறையாகத் தோன்றுகிறது.

இடையிடையே ஆங்கிலக் கட்டுரைகள் அமைந்திருப்பது சிறப்பியல்பாகும். திருமதி அங்கயற்கண்ணி சிவப்பிரகாஷின் "மாப்பிள்ளைக்கு ஏன் சீதனம்?" கவிதை பாராட்டும் வண்ணம் அமைந்துள்ளது. "இல்லறம் என்பது நல்லறம் சீதனம் கேட்டால் குறையும் அதன் தரம் நீ செய்வது அறம் அல்ல–அதர்மம்" என அவர் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார்.

திருமதி விமலா மணிவாசகத்தின் "சமுதாயமும் விதவைகளும்" கட்டுரை படிப்பினையூட்டும் வண்ணம் அமைந்துள்ளது. இக்கட்டுரை மூலம் அவர் விதவைகள் முன்னேற வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தியுள்ளார்.

"பாரில் பெண்ணிடம் பணம் இல்லையேல் அப்பாவி அவளிற்கு மணம் இல்லையா?" என வாசவி கவிதை மூலம் குமுறுகிறார்.

இந்த சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள ஆங்கில உரையாடல்கள் பலருக்கு பயனுள்ளதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. "சிறுவர் விஞ்ஞானம்" சிறுவர்களுக்கு பயனுள்ள அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

"The deadly diseases" கட்டுரை மூலம் புற்றுநோய் பற்றி விரிவாக அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. இது ஓர் பயனுள்ள கட்டுரையாகும்.

முதலாவது இதழ் வெளியீட்டு விழாவின் போது கல்லூரியின் பழையமாணவிகள் அளித்த வில்லுப்பாட்டு இவ்விதழில் இடம்பெற்றுள்ளது.

கல்லூரி வரலாற்றையும் கடமையாற்றிய அதிபர்களின் சிறப்பையும் வில்லுப்பாட்டு சிறப்புற விளக்குகிறது. வார்த்தைகளை அழகுற அமைத்து பாடலாக்கிய பெருமை திருமதி அன்னலட்சுமி இராஜதுரையையே சேரும்.

பாடசாலை அதிபர்கள் நினைவு கூடும் கட்டடங்கள் அழகுற அமைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர இன்னும் பல ஆக்கங்கள், குறிப்புகள் இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ளன.

*இ. மீரா.*

*வீரகேசரி பக்கம் 6, சனிக்கிழமை, 5.10.1996*



மலிவு விற்பனைக்கு பிரதம அதிதிகளாக வருகை தந்த திரு திருமதி தவயோகராஜா



யாழ் நாதம் இதழ் 3 வெளியீட்டின் போது பிரதம அதிதி திருமதி ஜெயசீலன் வருகை




நம்மவர் நடத்தும் அரட்டையர் அரங்கம்

# சஞ்சிகை ஒரு விமர்சனம்

சஞ்சிகை : யாழ்நாதம் 2

வெளியீடு : யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் கொழும்புக் கிளை.

இதழ் : 2, 1996

யாழ் நாதம் இரண்டாம் இதழ், யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கக் கொழும்புக் கிளையினால் வெளியிடப்பட்டுள்ளது. இலைமறைகாயாக இருக்கும் எழுத்தாற்றல்களை வெளிப்படுத்தி ஊக்குவிக்கும் முயற்சியாக இந்தச்சஞ்சிகையைக் காலாண்டு மலராக வெளியிடுவதே தமது குறிக்கோளாகும் என சங்கத்தின் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதன் குறிப்பிட்டமை வரவேற்கத்தக்கதாகும்.

பெண்கள் மட்டுமே வாசிக்கும் அம்சங்களுடன் இல்லாது, குடும்ப அங்கத்தவர்கள் எல்லோருக்குமே பயன்படக்கூடிய முறையில் பல்வேறு அம்சங்கள் கொண்டதாக இம்மலர் உருவாகியுள்ளது. கட்டுரைகள், கவிதைகள், சிறுவர் விஞ்ஞானம், 'அறிவாலயம்', வில்லுப்பாட்டு, நகைச்சுவைத்துணுக்குகள், வீட்டுக் குறிப்புகள் இவ் இதழில் அடங்கியுள்ளன. "மாப்பிள்ளைக்கு ஏன் சீதனம்? ஆண்மகனே கூட்டுக்குள் இருந்து வெளியே வந்து விடு" என்பன சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளாகும்.

மேலும் எமது அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் சில ஆங்கில உரையாடல்கள் பயனுள்ள பாராட்டத்தக்க அம்சமாகும். "The Deadly Diseases" என்ற கட்டுரையில் புற்றுநோய், Aids போன்ற நோய்கள் பற்றி குறிப்பிட்டமை மிகவும் பயனுள்ளதாகும்.

யாழ் நாதம் இரண்டாம் இதழ், விரிந்து மணம் பரப்புகிறது என்று கூறலாம்.

*விஸி*

*நவமணி சனிக்கிழமை 19.10.1996. பக்கம் – 8.*

Printed by Unie Arts (Pvt) Ltd.